
https://puthusudar.lk/ 2023 OCTOBER 29 - SUNDAY PAGE 03

இலங்கையில் உருவாகவிருந்த காஸா:

திட்டமிட்டவர்கள் இவர்கள்தான்

இஸ்ரேல்-பலஸ்தீன் போரில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு ஹமாஸுக்கு ஆதரவாக இறங்கினால் நிச்சயம் ஈரானும் இறங்கும்.ஈரான் இறங்கினால் ஈரானின் உதவிக்கு ரஷ்யாவும் இறங்கும்.சீனாவும் ஈரானுடன் கைகோக்கும்.அது பெரும் போராக மாறும்.

இலங்கையில் பிரித்தானிய ஆட்சி இடம்பெற்றபோது யூதர்களை இங்கே குடியமர்த்துவதற்கு யோசனை ஒன்றைக் கொண்டு வந்தது பிரித்தானியா.அது நடந்திருந்தால் பலஸ்தீனில் நடக்கும் பிரச்சினை இங்கேதான் நடந்திருக்கும். காஸா இங்கேதான் உருவாகி இருக்கும்.

முழுமையான நேர்காணலுக்கு
பக்கம் 03 >>>>

https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

29th OCTOBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 51



## ரணில் – மொட்டு மோதல் உக்கிரம்:

# பட்ஜட்க்கு முன் அமைச்சரவை மாற்றம்



மொட்டு கட்சியின் கருத்துக்களை கணக்கில் எடுக்காது புதிய அமைச்சர்களை நியமித்தமை காரணமாக

02 ▶

## சஜித்துடன் கைகோக்கும் டலஸ் தரப்பு

எதிர்வருகின்ற அனைத்துத் தேர்தல்களிலும் சஜித் தரப்புடன் கூட்டமைப்பு அமைத்துச் செயற்படுவதற்கு டலஸ் தரப்பு தீர்மானித்துள்ளது என்று அறிய முடிகிறது.

இக்கூட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் இரு தரப்பும்

02 ▶






## பலஸ்தீன் இஸ்ரேல் போரால் இறக்குமதி பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

இடம்பெற்று வரும் இஸ்ரேல்-பலஸ்தீன் போர் காரணமாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

பொருட்களை ஏற்றிவருகின்ற கப்பல்களுக்கான காப்புறுதி கட்டணங்களும் அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம்.

கப்பலுக்கான ஆபத்தைக் கருத்தில் கொண்டு சர்வதேச காப்புறுதி நிறுவனம் காப்புறுதி கட்டணங்களை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஜித்துக்கு எதிராக பொன்சேகா...

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசாவின் வெற்றிக்காக உழைக்கமாட்டேன் என்று அக்கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சஜித்துக்கு எதிரான பொன்சேகாவின் நிலைப்பாடு தொடர்பில் கட்சியின் செயலாளர் ரஞ்சித் மதுமபண்டார,திஸ்ஸ அத்தநாயக்க,கயந்த கருணாதிலக உள்ளிட்ட குழுவினர் பொன்சேகாவை நாடாளுமன்ற குழு அறையில் வைத்து விசாரணை

02 ▶





புது சுடர்
www.puthusudar.lk
2023 OCTOBER 29 - SUNDAY

# தரைவழி போர்: இஸ்ரேலுக்கு படுதோல்வி

இஸ்ரேல் –பலஸ்தீன் போர் என்பது ஒரு சாதாரண போர் அல்ல. அது இஸ்லாமிய நம்பிக்கையுடன் தொடர்புபட்டது.

உலக அழிவின் அடையாளங்களுடன் தொடர்புபட்டது. பலஸ்தீன் தொடர்பில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் என்னவெல்லாம் கூறியுள்ளார்களோ என்னென்ன எதிர்வு கூறல்களை தெரிவித்துள்ளார்களோ அத்தனையும் நடந்தே தீரும்.

அவர்கள் அறிவித்த உலக அழிவு அடையாளங்கள் அத்தனையும் நடந்துகொண்டே வருகின்றன.

ஹிஜாஸில் நெருப்பு போன்ற பல அடையாளங்கள் நடந்து முடிந்துவிட்டன.இன்னும் பெரும் பெரும் அடையாளங்கள் நிகழவுள்ளன.

அவற்றுள் முக்கியமானதுதான் பலஸ்தீனத்துடன் தொடர்புபட்ட அடையாளங்கள்.

இமாம் மஹ்தியின் ஆட்சி,தஜ்ஜாலின் வருகை,ஈஸா நபி அவர்களின் வருகை, தஜ்ஜாலின் கொலை, அல்– அக்ஸா பள்ளிவாசல் மீட்பு என்று பல அடையாளங்கள் இடம்பெறும்.

இப்போது பலஸ்தீன மக்கள் யூதர்களிடம் இருந்து மீட்பதற்காகப் போராடி வருகின்ற அல்–அக்ஸாவை ஈஸா நபி அவர்களே மீட்பார்கள்.

இந்த அடையாளங்கள் எல்லாம் எப்போது இடம்பெறும் என்று சொல்ல முடியாது. ஆனால்,நடந்தே தீரும்.அதுதான் இஸ்லாமிய நம்பிக்கை. இந்த அடையாளங்கள் நிகழும்வரை இஸ்ரேல்–பலஸ்தீன போர் நடந்துகொண்டேதான் இருக்கும்.

ஆனால்,ஒருபோதும் இஸ்ரேலால் பலஸ்தீனை வெற்றிகொள்ளவே முடியாது. ஈஸா நபி அவர்கள் வரும்வரை சண்டை தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

இப்போது இடம்பெறும் சண்டை மூன்றாவது உலகப் போராக மாறலாம் அல்லது அதைவிட பெரும்சண்டையாக மாறலாம்.

எப்படிப்பட்ட பயங்கரமான சண்டையாக இருந்தாலும்,அது யூதர்களுக்கு வெற்றியைக் கொடுக்காது.அவர்களால் பாலஸ்தீனத்தை பிடிக்கவே முடியாது.

விமானங்கள் மூலம் குண்டுகளை போட்டு காஸாவை முற்றாக அழித்துவிடலாம் என்று நினைக்கிறது இஸ்ரேல்.

அவர்கள் அந்தக் கட்டடங்களை வேண்டுமானால் அழிக்கலாம்.பலஸ்தீனை அழிக்கவே முடியாது.

காஸாவுக்குள் தரைவழியாக நுழைவதற்கு முற்பட்டு இப்போது தோல்வியில் நிற்கிறது இஸ்ரேல்.

இந்தச் சண்டை தொடங்கியதில் இருந்து இஸ்ரேலிய படையினர் காஸாவின் எல்லையிலேயே நிற்கின்றனர். உள்ளே நுழையவில்லை.

ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த இஸ்ரேல் படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

இருந்த இடத்தில் இருந்துகொண்டு பட்டனை தட்டிவிட்டு எதிரியை அழிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் இந்த யூதர்கள்.

நேருக்கு நேரே சண்டை செய்யும் தைரியம் அவர்களுக்கு இல்லை. அப்படி தைரியம் இல்லாத யூதர்களால் எப்படி பலஸ்தீனத்தை கைப்பற்ற முடியும்? ஹமாஸை அழிக்க முடியும்?

தரை வழியால் செல்லாமல் ஹமாஸை அழிக்க முடியாது.தரை வழியால் சென்றால் யூதர்களால் தப்ப முடியாது.

ஹமாஸ் அழிவதை விடவும் யூதர்கள் தப்புவதே யூதர்களின் தேவை. தரை வழி பயங்கரமானது.ஹமாஸின் பயந்தரமானபலமான சுரங்க பாதைகள் அங்கு அதிகம் உள்ளன.

அதற்குள் இஸ்ரேலிய கனரக வாகனங்கள் சிக்கிவிடும். பிறகும் அந்த வாகனங்களையும் மீட்க முடியாது. இஸ்ரேலிய படையினரையும் மீட்க முடியாது.

சுரங்கங்களுக்கு அப்பால் கன்னி வெடிகள் அதிகம் அங்கு புதைக்கப்பட்டுள்ளன.

அதில் சிக்கி ஒரு இஸ்ரேலிய இராணுவத்தின் கால் பறந்தாலே போதும்.ஏனைய இராணுவத்தின் உள தைரியம் சிதைந்துவிடும்.

கண்ணீர் விட்டு அழுதுவிடுவார்கள். காயப்பட்டவர்களை அப்படியே போட்டுவிட்டு பின்வாங்கிவிடுவார்கள்.

அதுதான் இப்போது நடந்துள்ளது. உலகத்தின் எந்தவோர் இராணுவத்திடமும் இல்லாத பழக்கம்தான் இஸ்ரேலிய இராணுவத்திடம் இருக்கும் கண்ணீர் விட்டு அழும் பழக்கம்.

இந்த மனநிலையோடு எப்படி சண்டை செய்ய முடியும்.?

கைகளில் பலமான துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு பலஸ்தீன சிறுவர்களின் கல் வீச்சுக்களுக்கு அஞ்சி ஓடுபவர்கள் இஸ்ரேலிய படையினர்.

இவர்களா தரை வழியாக காஸாவுக்குள் நுழைந்து ஹமாஸை அழிக்கப் போகிறார்கள்? ஹமாஸின் மனவலிமைக்கு முன் இவர்கள் வெறும் தூசு. மேலும் காஸாமீதான போரை நிறுத்தாவிட்டால் இஸ்ரேலுக்கு எதிராக துருக்கியும் ஈரானும் களமிறங்கப் போவதாக அறிவித்துள்ளன.

அரபுலகில் இந்த இரண்டு நாடுகளும் பலமிக்க நாடுகள்.இந்த நாடுகள் களமிறங்கினால் இவர்களுடன் சேர்ந்து ரஸ்யா உள்ளிட்ட இஸ்ரேல் எதிர்ப்பு நாடுகளும் களமிறங்கும்.அப்போது இஸ்ரேல் பெரும் அழிவைச் சந்திக்கும்.

தாம் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதற்காகவே இஸ்ரேலை உருவாக்கி வைத்துள்ளார்கள் யூதர்கள். அப்படிப்பட்டவர்கள் அந்த அழிவை விரும்பமாட்டார்கள்.

ஆனால், பலஸ்தீன மக்களுக்கு அழிவு என்பது பழகிப்போன ஒன்று. இதனால் பலஸ்தீனை வெற்றிகொள்ள முடியாத இந்தப் போர் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.ஈஸா நபியின் வருகை வரை பலஸ்தீன மக்களும் விடாமல் போராடிக்கொண்டே இருப்பார்கள்.

உலக முடிவுக்கான படுபயங்கரமான போர் எல்லாம் இந்தப் பகுதியில்தான் இடம்பெறும். அவர்களால் பலஸ்தீனை மாத்திரமல்ல எந்தவொரு முஸ்லிம் நாட்டையும் இவர்களால் முழுமையாகப் பிடிக்க முடியாது.

ஆகவே, இஸ்ரேல் தனக்கு ஏற்படப்போகும் அழிவில் இருந்து தப்ப வேண்டுமென்றால் உடனடியாக போரை நிறுத்தியே ஆகவேண்டும்.

## சஜித்துக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடத்தினர்.அப்போதே அவர் அவரது நிலைப்பாட்டைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் தன்னை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று பொன்சேகா கூறி வருகிறார்.ஆனால்,கட்சியோ அதன் தலைவர் சஜித் பிரேமதாசாவையே வேட்பாளராக அறிவித்துள்ளது.

இதன் காரணமாகவே பொன்சேகா இப்போது சஜித்துக்கு எதிராகக் களமிறங்கியுள்ளார்.

## சஜித்துடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விரைவில் சந்தித்துப் பேசவுள்ளன.

கோத்தாபே ராஜபக்ஸ ஜனாதிபதி பதவியை விட்டு ஓடியதன் பின் புது ஜனாதிபதி தெரிவு நாடாளுமன்றில் இடம்பெற்றது.

மொட்டு தரப்பில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்ட அதே நேரம்,எதிர்தரப்பில் டலஸ் அழகப்பெருமவே போட்டியிட்டார்.

சஜித் தரப்புடன் அவர் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் சஜித் போட்டியிடாது டலஸ் போட்டியிட்டார்.சஜித் தரப்பு அவருக்கு பூரண ஆதரவு வழங்கியது.

அந்தப் புரிந்துணர்வு இன்னும் இருப்பதால் இனிவருகின்ற அனைத்துத் தேர்தல்களிலும் இரு தரப்பும் இணைந்து செயற்படுவது நல்லதென்று இரு தரப்புக்களும் முடிவெடுத்துள்ளன .

## ரணில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மொட்டு கட்சிக்கும் இடையில் இப்போது முறுகல் நிலை தோன்றியுள்ளது.

அந்த முறுகல் எதிர்வருகின்ற வரவு–செலவுத் திட்டத்தில் தாக்கம் செலுத்தும் என்று எதிர்பார்ப்பதால் வரவு–செலவுத் திட்டத்துக்கு முன் மீண்டும் அமைச்சரவை மாற்றம் ஒன்றை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளார் என்று ஜனாதிபதி வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

ரணில் ஜனாதிபதியானது முதல் மொட்டு கட்சியின் 10 பேருக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு பசில் ராஜபக்ஸ ரணிலிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையைத் தொடர்ச்சியாக நிராகரித்து வரும் ஜனாதிபதி சில நாட்களுக்கு முன் தான் விரும்பிய சிலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கி இருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த மொட்டு கட்சி ஜனாதிபதியை விமர்சித்து வருகிறது.இரு தரப்புக்கும் இடையிலான முறுகல் இப்போது உச்சமடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

இது வரவு–செலவுத் திட்டத்தைப் பாதிக்கும் என்பதால் வரவு–செலவுத் திட்டத்துக்கு முன் மொட்டு கட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப மீண்டும் அமைச்சரவை மாற்றம் ஒன்றை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று ஜனாதிபதி வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.






# இலங்கையில் உருவாகவிருந்த காஸா:

# திட்டமிட்டவர்கள் இவர்கள்தான்



கேள்வி : இஸ்ரேல்–பலஸ்தீன் மோதலால் மீண்டும் எமக்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுமா?

கேள்வி : இந்தப் போர் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும்?

கேள்வி : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்று இப்போது மீண்டும் பேசப்படுகிறது. உங்களின் நிலைப்பாடு என்ன?

கேள்வி : ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தை ஊடாக பிரதமராகி 2025 வரை ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக முயலுகிறாரா?

கேள்வி : அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக புதிய புதிய வேட்பாளர்கள் களமிறங்குகிறார்கள்.இதுபற்றி உங்களது கருத்து என்ன?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் சம்பிக்க ரணவக்க எம்பி. அவர் வழங்கிய முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : மின்கட்டண அதிகரிப்பு பற்றி...?**

பதில் : இலங்கை மின்சார சபை செலவைக் கட்டுப்படுத்துவதற்கோ பணத்தை மீதப்படுத்தவோ முகாமைத்துவத்தை சீர்படுத்தவோ இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால் செலவையும் மக்களின் தலையில் கட்டுவதற்கே மின்சார சபை திட்டமிடுகிறது.

2015 இல் நான் மின் சக்தியை பாரமேற்றபோது 4500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது.ஆனால்,நான் மின் கட்டணத்தை அதிகரிக்காமல் கட்டணத்தைக் குறைத்து 2000 கோடி ரூபா இலாபத்தைப் பெற்றுக் கொடுத்தேன்.

உரிய முகாமைத்துவத்தின் மூலமாகவே இதைச் செய்ய முடிந்தது.அதே முகாமைத்துவ சீர்சிருத்தத்தை செய்தால் நிச்சயம் மக்கள்மீது சுமையை ஏற்றாது–மின் கட்டணத்தைக் கூட்டாது மின்சார சபையை இலாபமீட்டும் சபையாக மாற்ற முடியும்.

மின் பாவனையும் குறைந்திருப்பதால் ஜனவரி மாதம்வரை மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை இல்லை.

**கேள்வி : இஸ்ரேல்-பலஸ்தீன் மோதலால் மீண்டும் எமக்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுமா?**

பதில் : இந்த யுத்தம் இடம்பெறும் என்று யாரும் நினைக்கவில்லை.இஸ்ரேலின் புலனாய்வு பலமானது.ஆனால்,இந்த விடயத்தில் அது பலமிழந்துள்ளது.

இருந்தாலும்,இஸ்ரேலில் எரிபொருள் உற்பத்தி செய்யப்படுவதில்லை.மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தே அது பெறப்படுகிறது.

அதனால் எமக்கான எரிபொருள் விநியோகத்துக்குத் தடை வராது. ஆனால்,இதன் ஸ்தீரத்தன்மை எப்படி அமையும் என்று சொல்ல முடியாது.

அதனால்தான் எரிபொருளின் விலை 5 வீதத்தால் உயர்ந்துள்ளது.

இந்தப் போரில் மத்திய கிழக்கு நாடுகளும் கலந்துகொள்ளுமா என்ற கேள்வி எழுகிறது.

ஜோர்தான்,லெபனான்,சிரியா போன்ற நாடுகளின் சில பகுதிகளை இஸ்ரேல் பிடித்து வைத்திருப்பதால் அவற்றை மீட்க வேண்டிய தேவை அந்த நாடுகளுக்கு உண்டு.அதனால் அந்த நாடுகளும் இந்தப் போரில் கலந்துகொள்ளுமோ என்ற கேள்வி எழுகிறது.

ஹிஸ்புல்லா அமைப்பு இந்தப் போரில் இறங்கினால் நிச்சயம் ஈரானும் இறங்கும்.ஈரான் இறங்கினால்

ஈரானின் உதவிக்கு ரஷ்யா நிச்சயம் செல்லும்.சீனாவும் ஈரானுடன் கைகோக்கும். அது பெரும் போராக மாறும்.

மறுபுறம்,அமேரிக்கா இஸ்ரேலுக்கு உதவியாக நிற்கும்.

அப்போது பாரிய எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்.

இஸ்ரேல் காஸாவுக்கான நீர்,மின்சாரம் போன்றவற்றைத் துண்டித்துள்ளது. இலங்கையில் போர்க் காலத்தில் நாம் இதை செய்திருந்தால் மேற்கு நாடுகள் எப்படி பேசி இருக்கும் என்று தெரியும்.

ஆனால்,இஸ்ரேல் அதைச் செய்யும்போது அமைதியாக இருக்கின்றன அந்த நாடுகள்.

பலஸ்தீன மக்கள் 60 லட்சம் பேர் அகதிகளாக வெளிநாடுகளில் வாழ்கிறார்கள்.அவர்களை மீளக் குடியேறுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

**கேள்வி : இந்தப் போர் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும்?**

பதில் : இலங்கை முதலில் மனிதாபிமானப் பக்கம் செல்ல வேண்டும். அப்பாவி மக்களை இஸ்ரேல் கொன்றாலும் சரி,ஹமாஸ் கொன்றாலும் சரி அதை எதிர்க்க வேண்டும்.

குறிப்பாக,காஸாவுக்கான நீர்,மின்சாரம் போன்றவற்றை இஸ்ரேல் துண்டித்துள்ளது.இந்த அநியாயத்தை இலங்கை எதிர்க்க வேண்டும்.

இரண்டாவது, நிலையான சமானத்தைக் கோர வேண்டும்.அகதிகளாக வெளிநாடுகளில் வாழ்கின்ற 60 லட்சம் பலஸ்தீனர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.

அங்கு இரண்டு நாடுகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதில் ஒரு முக்கியமான தகவலைச் சொல்ல வேண்டும்.

இலங்கையில் பிரித்தானிய ஆட்சி இடம்பெற்றபோது யூதர்களை இங்கே குடியமர்த்துவதற்கு யோசனை ஒன்றைக் கொண்டு வந்தது பிரித்தானியா.

அது நடந்திருந்தால் பாலஸ்தீனில் நடக்கும் பிரச்சினை இங்கேதான் நடந்திருக்கும்.காஸா இங்கேதான் உருவாகி இருக்கும்.

மேற்கு நாடுகள் அவர்களுக்கு விரும்பிய விதத்தில் இந்த உலகத்தை ஆட்டிப் படைக்கப் பார்க்கிறார்கள்.

பலஸ்தீனில் நிலையான சமாதானம் உருவாக வேண்டும்.

**கேள்வி : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்று இப்போது மீண்டும் பேசப்படுகிறது. உங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில் : ஜே.ஆர். ஜயவர்தன இந்த முறைமையை அறிமுகப்படுத்தியதில் இருந்து அவரவர் தேவைக்காக இதில் மாற்றம் செய்யப்பட்டு வந்துள்ளது.இதை ஏற்க முடியாது.

அரசமைப்பின் ஊடாக நாட்டின் ஜனநாயகமும் அரசியல் ஸ்தீரத்தன்மையும் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாக இருந்தால் ஸ்தீர ஆட்சியை உருவாக்கும் வகையில் தேர்தல் முறைமை உருவாக்கப்பட வேண்டும்.1977 இற்கு முன்பு இருந்ததுபோல்.

ஆனால்,இன்றைய நிலைமை இதைவிட வித்தியாசமானது.இந்த அரசால் இதுபற்றிபேசுவதற்குக்கூட மக்களின் ஆணை இந்த அரசுக்கு இல்லை.

**கேள்வி : ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தை ஊடாக பிரதமராகி 2025 வரை ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக முயலுகிறாரா?**

பதில் : கோத்தா ஆட்சிக்கு வந்ததும் கோத்தா யுகம் ஆரம்பமாகிவிட்டது என்றார்கள்.2 தாசப்தங்களுக்கு அசைக்க முடியாது என்றார்கள்.

ஆனால்,அவரை மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் ஆட்சிக்குக் கொண்டுவந்த மக்கள் 2 வருடங்களிலேயே அவரை விரட்டிவிட்டார்கள்.

மக்கள் இப்போது எதிர்பார்த்துக்கொண்டிருப்பது தேர்தல் ஒன்றைத்தான்.அதன்மூலம் அவர்கள் யாரை ஆட்சிக்குக் கொண்டுவருவது யாரை விரட்டுவது என்று முடிவெடுப்பார்கள்.

**கேள்வி : அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக புதிய புதிய வேட்பாளர்கள் களமிறங்குகிறார்கள்.இதுபற்றி உங்களது கருத்து என்ன?**

பதில் : ஜனாதிபதி தேர்தலுக்கு இன்[illegible] காலமிருக்கிறது.அரசியல் மிக வேகமா[illegible] மாற்றமடைகிறது.இலங்கை போன்ற வங்குரோத்து அடைந்த நாடுகளில் இ[illegible] வேகமாக மாற்றமடைகிறது.

இதனால் அடுத்து என்ன நடக்கும் எ[illegible] தெரியாது.ஆனால்,கவனமாக செயற்பட வேண்டும்.தவறினால் புத்திஜீவிகள் எவரு[illegible] இல்லாத நாடாக இந்த நாடு மாறும்.

**கேள்வி : உங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நீங்களா?**

பதில் : அப்படியொரு முடிவும் எடுக்கவில்லை.தேர்தல் இல்லாமல் இப்போது முடிவெடுக்கத் தேவையில்லை.

ஆனால்,குடும்பங்களுக்கும் பணக்காரர்களுக்கும் அதிகாரம் வழங்கப்படத் தேவையில்லை.இந்த நாட்டில் சிறந்த கல்விமான்கள் உள்ளார்கள். அவர்களிடம் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

அதேபோல்,சிறந்த கிரிக்கட் வீரர் என்பதற்காக,சிறந்த நடிகர் என்பதற்காக,அழகானவர் என்பதற்காக அதிகாரம் வழங்கப்படக்கூடாது.

படித்தவர்களிடமே வழங்கப்பட வேண்டும்.

எங்களிடம் நாட்டை ஒப்படைத்தால் முதலாவது வருடத்திலேயே வரி அதிகரிப்பின்றி நாட்டின் இலாபத்தை 50 வீதத்தால் சொல்கிறேன்.

**கேள்வி : சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் சட்டமூலம் தொடர்பில் ?**

பதில் : இது உண்மையான ஒன்றல்ல.இது அரசியல் பழிவாங்கலுக்காக உருவாக்கப்படும் சட்டமூலம்.

சமூக ஊடகத்தில் வெளியாகும் பதிவு தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ஐவர் கொண்ட குழுவை நியமிக்கிறார்.அது அரசியல் குழு.இதனால் நிச்சயம் அரசியல் பழிவாங்கல் இடம்பெறும்.

எதிர்காலத்தில் அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கும் திட்டமே இது.

இப்படியெல்லாம் மக்களை கட்டுப்படுத்த முடியாது.இப்படிச் செய்யப் போய் பல நாடுகள் தோல்வியடைந்துள்ளன.

ஆகவே,இச்சட்டமூலம் தோற்கடிக்கப்பட வேண்டும்.–என்றார்.

**இஸ்ரேல்-பலஸ்தீன் போரில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு ஹமாஸ்'க்கு ஆதரவாக இறங்கினால் நிச்சயம் ஈரானும் இறங்கும்.ஈரான் இறங்கினால் ஈரானின் உதவிக்கு ரஷ்யாவும் இறங்கும்.சீனாவும் ஈரானுடன் கைகோக்கும்.அது பெரும் போராக மாறும்.**

**இலங்கையில் பிரித்தானிய ஆட்சி இடம்பெற்றபோது யூதர்களை இங்கே குடியமர்த்துவதற்கு யோசனை ஒன்றைக் கொண்டு வந்தது பிரித்தானியா.அது நடந்திருந்தால் பலஸ்தீனில் நடக்கும் பிரச்சினை இங்கேதான் நடந்திருக்கும். காஸா இங்கேதான் உருவாகி இருக்கும்.**





# நாமலைத் தேடிய ஜெய்சங்கர்



அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மஹிந்த ராஜபக்வுடன் சந்திப்பொன்றை நடத்தினார்.

இச்சந்திப்பு இடம்பெற்றது மஹிந்தவின் கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில். மஹிந்தவுடன் மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசமும் இருந்தார்.

அப்போது ஜெய்சங்கர் நாமலைத் தேடத் தொடங்கினார்.மஹிந்தவிடம் விசாரித்தார்.அவர் சற்று நேரத்தில் வந்துவிடுவார் என்று மஹிந்த கூறினார்.

அவ்வாறு கூறி 15 நிமிடங்களில் நாமல் வந்துவிட்டார்.

“எங்க போன..நான் உங்கள எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்” என்றார்.ஜெய்சங்கர்.

தான் கட்சி அலுவலகத்தில் இருந்ததாகவும் நீங்கள் வந்த செய்தி அறிந்து விரைவாக ஓடி வந்ததாகவும் நாமல் பதில் கூறினார்.

அதன் பின் ஜெய்சங்கர் பேச வந்த விடயங்களை பேசினார்.அது அரசியல் ரகசியம்.அந்த ரகசியத்தை நாமலையும் வைத்துக்கொண்டு பேச வேண்டும் என்பதற்காகத்தான் நாமலை எதிர்பார்த்திருந்தார் என்று சொல்கிறது மஹிந்தவின் வட்டாரம்.

# பெரிய பதவி வேணுமாம்

தனக்கு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பதவி அல்லது பிரதி தலைவர் பதவி வேண்டும் என்று அடம்பிடித்து வருகிறார் ரவி கருணாநாயக்க.

இந்த விவகாரம் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கேபண்டாரவால் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அவர் குழுவொன்றை நியமித்து இந்த விவகாரத்தை ஆராய்ந்தார்.

பாலித ரங்கேபண்டா,சாகல காரியவசம்,ருவான் விஜயவர்தன மற்றும் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் கூடி இதுபற்றி ஆராய்ந்தனர்.

கட்சியின் கஷ்ட காலத்தில் கட்சியில் இருந்து விலகியிருந்தவர்கள் ரணில் ஜனாதிபதியானதும் கட்சியுடன் இணைந்து உயர் பதவி கேட்பதில் நியாயமில்லை என்ற கருத்தை அவர்கள் வெளியிட்டனர்.

இறுதியில்,ரவிக்கு உயர் பதவி வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு அவர்கள் வந்தனர்.



# சஜித்துக்கும் அழைப்பு



அண்மையில் ஜேர்மன் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஊடக நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்து சர்ச்சையில் சிக்கினார் அல்லவா.பேட்டி எடுத்த ஊடகவியலாருடன் கடுமையாக நடந்துகொண்டு...

அந்த ஊடக நிறுவனம் இலங்கையின் இன்னும் ஒருவரைப் பேட்டி காண்பதற்கு ஜேர்மனிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாம்.

அவர் வேறு யாருமல்ல எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாதான்.

ரணிலை பழிவாங்குவதற்காக அந்த ஊடக நிறுவனம் சஜித்துக்கு இந்த வாய்ப்பை வழங்கி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மிக விரைவில் அந்தப் பேட்டியைக் காணலாம்.

துப்பறிவாளன்

# லான்சாவுக்கு இன்ப அதிர்ச்சி



அண்மையில் பிறந்த நாளைக் கொண்டாடினார் நிமால் லான்ஸா.

அவருக்கு இன்ப அதிர்ச்சி ஒன்றைக் கொடுப்பதற்குத் திட்டமிட்டார் வஜிர அபயவர்தன எம்பி.

பிறந்த நாள் கேக் ஒன்றை வாங்கி வைத்துக்கொண்டு லான்சாவை அவசரமாக அழைத்தார் வஜிர.

ஏதோ அவசர வேலை என்று நினைத்துக்கொண்டு அடித்துப் பிடித்துக்கொண்டு ஓடினார் லான்சா.

அங்கே போய்ப் பார்த்தால் அவரது பிறந்த நாள் ஏற்பாடு.அதிர்ந்து போனார் லான்சா.

அவரது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக அங்கே மேலும் பல எம்பிக்கள் நின்றனர்.

அதேநேரம்,ஜனாதிபதியும் தொலைபேசி அழைப்பு எடுத்து லான்சாவுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

# கிரிக்கட் வீரர்களும் ஆதரவாம்



நிமால் லான்ஸாவின் கூட்டமைப்புக்கும் கிரிக்கட் வீரர்கள் சிலருக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

அந்தக் கூட்டமைப்புக்கு கிரிக்கட் வீரர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே அச்சந்திப்பு இடம்பெற்றது.

நல்ல பலமான கூட்டமைப்பாக இந்தக் கூட்டமைப்பை உருவாக்குமாறும் கிரிக்கட் வீரர்களின் ஆதரவைப் பெற்றுத் தருகிறேன் என்றும் அரசியலுடன் தொடர்புடைய பிரபல கிரிக்கட் வீரர் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

# தப்பினார் விமல்



நசீர் அஹமட்டின் எம்பி பதவி நீதிமன்ற உத்தரவின்பின் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து மொட்டு கட்சி முக்கியஸ்தர்களும் அதேவேளையில் இறங்கினர்.

அவர்களுள் சிலர் விமல் வீரவன்ச தரப்பினரின் எம்பி பதவிகளை பறிப்பதற்குத் திட்டமிட்டனர்.

பசில் ராஜபக்ஸவை சந்தித்து இதுபற்றிக் கூறினர்.

2020 நாடாளுமன்றத் தேர்தலின்போது விமலின் கட்சியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி அவர்கள் விரும்பினால் எந்நேரமும் அரசை விட்டு வெளியேற முடியும் என்று உள்ளது.

இதனால் அவர்களின் எம்பி பதவிகளை பறிக்க முடியாது என்று கூறினார் பசில்.

தப்பினார் விமல்....!!!




# HNBஇன் இஸ்லாமிய வங்கிற்கு ஐந்து விருதுகள்

இஸ்லாமிய வங்கியியல் தீர்வுகளில் தேசத்தின் தலைமைப் பதவியை நிலைநிறுத்திக் கொண்டு, இலங்கையின் மிகவும் புத்தாக்கமான தனியார் துறை வங்கியான HNB PLC இன் Al Najaah பிரிவு, இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித்துறை விருதுகள் (SLIBFI) 2023 இல் தனது வெற்றிப் பயணத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

“ஆரம்பத்திலிருந்தே, HNB அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களுக்கும் முன்னேற்றத்தில் பங்குதாரராக சேவையாற்றி வருகிறது. முழுவதுமாக, அவர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை வழங்குவதற்காக, எங்கள் தயாரிப்பு மற்றும் சேவை கோப்புறையை தொடர்ந்து மேம்படுத்த முயன்றுள்ளோம்.

”ஒரு தசாப்தத்திற்கு முன்னர் HNB Al யேதயயா அறிமுகப்படுத்தப்பட்டது, குறிப்பாக இலங்கைப் பொருளாதாரத்தின் அடிமட்டத்தில் அதிக நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கான இந்த பரந்த பணியின் முக்கிய விரிவாக்கமாகும்.

இந்த விருது அவர்களின் உத்வேகமான பணிக்கான சான்றாக உள்ளது, மேலும் ஒவ்வொரு இலங்கையருக்கும் நிதி மற்றும் வாய்ப்புக்கான அணுகலை விரிவுபடுத்தும் எங்கள் பகிரப்பட்ட பணி,” என HNBஇன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனதன் அலஸ் கூறினார்.

இந்த ஆண்டின் மதிப்புமிக்க இஸ்லாமிய நிதி நிறுவனத்திற்கான தங்க விருதுகள் மற்றும் ஆண்டின் Islamic Finance Window/ Unit உள்ளிட்ட மூன்று விருதுகளை வங்கி வென்றுள்ளது. 2012 இல் நிறுவப்பட்ட, உடீ இன் இஸ்லாமிய வங்கிப் பிரிவு (IBU) 2014 முதல் ஏராளமான விருதுகளை குவித்து, இஸ்லாமிய வங்கி துறையில் தொடர்ந்து முன்னணியில் உள்ளது.

# புதிய வடிவில் தீவா




இலங்கையில் சலவை மற்றும் தனிநபர் பராமரிப்புத் துறையை மீள்வரையறை செய்யும் வகையில், புத்துணர்ச்சி மற்றும் புத்துயிர் பெற்ற  தீவா ஃப்ரெஷ், தீவா பவர், தீவா சோப் ஆகிய தயாரிப்புகளை மீள் அறிமுகப்படுத்துவதில் தீவா பெருமிதம் கொள்கிறது.

அதன் செயற்பாட்டு பண்புகள் மற்றும் மதிப்பை மேம்படுத்தும் வகையில் கவனம் செலுத்தி, ஒரு புதுப்பிக்கப்பட்ட வர்த்தகநாம மாற்றத்துடன் தீவா தற்போது வெளிவருகிறது. இதன் மூலம் வளர்ந்து வரும் சந்தையில், அதிகரித்து வரும் நுகர்வோர் தேவைகளைப் புரிந்துகொண்டு அவற்றை நிவர்த்தி செய்கிறது.

இந்த மாற்றமானது, தீவாவின் வர்த்தகநாம அர்ப்பணிப்பு மற்றும் அதன் நோக்கத்துடன் இணைந்தவாறான நவீன மற்றும் எழுச்சியூட்டும் தோற்றத்தை காண்பிக்கிறது.

இவை தீவாவின் முக்கிய தயாரிப்புகளான தீவா ஃப்ரெஷ், தீவா பவர், தீவா சோப் ஆகியவற்றிற்கு வர்த்தகநாம மதிப்பை சேர்க்கின்றன.

Hemas Consumer Brands இனது சலவைப் பராமரிப்பு பிரிவின் தலைவி, திருமதி அனுஷ்கா சபாநாயகம், இந்த புதிய தோற்றம் மற்றும் நுகர்வோர் எதை எதிர்பார்க்கலாம் என்பது பற்றி தெரிவிக்கையில், ”விசேடத்துவம் மற்றும் புத்தாக்கங்கள் ஆகியவற்றின் மூலம் தீவாவின் பயணம் தொடர்கிறது.

# Autism இடையீட்டு நிலையம்





சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB) மற்றும் சிறுவர் அபிவிருத்திக்கான இலங்கை சம்மேளனம் (SLACD) ஆகியன “பிரகதி” தென் மாகாண ஒட்டிசம் மற்றும் நரம்புவிருத்தி இடையீட்டு நிலையத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்துள்ளன. இதனூடாக, “ஒட்டிசத்துக்கு எதிராக முன்கூட்டியே செயலாற்றுங்கள்” எனும் திட்டத்தில் முக்கிய மைல்கல்லாக இது அமைந்துள்ளது.

கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள இந்த நவீன வசதிகளுடனான நிலையத்தில், ஒட்டிசம் குறைபாட்டைக் (ASD) கொண்ட சிறுவர்களுக்கு எதிர்பார்ப்புகள் மற்றும் ஆதரவை பெற்றுக் கொடுக்கும் வகையில் ரூ. 45 மில்லியனுக்கு அதிகமான தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது.

யுளுனு குறைபாட்டைக் கொண்ட பரந்தளவு சிறுவர்களின் தேவைகளுக்கு சேவையாற்றும் வகையில் பிரகதி இடையீட்டு நிலையம் அமைந்துள்ளது. சிகிச்சையளிப்பு அறைகளினூடாக, கவனக்குலைப்பு இல்லாத சூழல் வழங்கப்படுவதுடன், அதிகளவு பயிற்சி பெற்ற சிகிச்சையாளர்களினூடாக பிரத்தியேகமான பராமரிப்பு வழங்கப்படுகின்றது.

இதேவேளை, கண்காணிப்பு அறையினூடாக, நிபுணர்களுக்கு இரகசியமான முறையில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளும் வசதி வழங்கப்படுவதுடன், சிறுவர்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யவும் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

கட்டமைக்கப்பட்ட இடையீட்டு திட்டங்களுக்கமைய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவியாக இந்த அறைகள் அமைந்திருப்பதுடன், சிறந்த சுகாதாரத்தை நோக்கிய ஒவ்வொரு பிள்ளையின் பயணத்தையும் உறுதி செய்கின்றது. அத்துடன், சிறுவரின் விருத்தி என்பது நெருக்கமாக கண்காணிக்கப்படுவதுடன், செம்மையாக்கப்படுகின்றது.




# ஹெவ்லொக் சிட்டி திறப்பு விழா

சர்வதேச தரத்திலான ஷொப்பிங் கட்டடத்தொகுதியான ஹெவ்லொக் சிட்டி மோல் 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி பிரமாண்டமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இது நிகரற்ற ஷொப்பிங் மற்றும் பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்கி, எம் மக்களுக்கு மிகப்பொருத்தமான ஒரு இடத்தை கொழும்பின் முக்கிய இடத்தில் உருவாக்குகிறது.

200,000 சதுர அடிக்கு மேல் பரந்து காணப்படும் ஹெவ்லொக் சிட்டி மோல் ஒரு விற்பனையக சொர்க்கமாகும், இங்கு ODEL,காகில்ஸ் ஃபுட் ஹோல், ஸ்கோப் சினிமாஸ், ஃபுட் ஸ்டுடியோ, கூல் பிளானட் மற்றும் அபான்ஸ் உள்ளிட்ட ஆறு முதன்மை விற்பனையகங்கள் உள்ளன.

மேலும், 132 ஏனைய விற்பனை நிலையங்களும் இருப்பதோடு, அவை இணையற்ற ஃபேஷன் மற்றும் அணிகலன் தெரிவுகள், பொழுதுபோக்கு அம்சங்கள், மதிமயக்கும் உணவு மற்றும் பானங்கள், வசதி சேவைகள், எலக்ட்ரானிக்ஸ், வீட்டு உபகரணங்கள், மற்றும் பரிசுகள் மற்றும் புதுமையான அம்சங்களைப் பெற்றுத் தருகின்றன.

உணவுப் பிரியர்களைப் பொறுத்தவரை ஹெவ்லொக் சிட்டி மோல் வழங்கும் தெரிவுகளை ஒரு சமையற்கலை சாகசப் பயணம் என்று சொல்லலாம்.

30க்கு மேற்பட்ட விசேட உணவகங்கள், துரித சேவை இடங்கள், கஃபே, மற்றும் ஸ்போர்ட்ஸ் பார்கள் இணைந்து வழங்கும் உலகளாவிய உணவு வகைகள் மற்றும் உள்நாட்டு விருப்பத் தெரிவுகள் என அனைத்தும் கிடைக்கும் சிலிர்ப்பூட்டும் food court உடன் உங்களுக்குப் புதியதொரு அனுபவம் கிடைப்பது நிச்சயம்.



# கண்புரை நோயாளிகளுக்காக நவீன கருவி

முன்னணி பன்முகத் துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் சுகாதாரப் பிரிவான DIMO Healthcare ஆனது, ஒளியியல் மற்றும் ஒளியியல் இலத்திரனியல் கருவிகள் துறையில் உலகளாவிய புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனமான ZEISS உடன் இணைந்து, ZEISS CT LUCIA 621P Monofocal Intraocular Lens (IOL) கருவியை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது.

இந்த புத்தாக்க கண்டுபிடிப்புக் கருவியானது கண்புரை அறுவை சிகிச்சை நடைமுறைகளை மீள்வரையறை செய்து, நோயாளிகளுக்கு மேம்பட்ட பார்வை பெறுபேறுகளை வழங்குகிறது.

ZEISS கண்புரை தீர்வு தயாரிப்புகளின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ள CT LUCIA 621P Monofocal IOL கருவியானது, கண்புரை நோயாளிகளுக்கு மேம்பட்ட காட்சி பெறுபேறுகளை வழங்குவதற்கு அவசியமான கருவியாக, அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு உதவுகின்றது.

ஏற்கனவே அதில் அமைக்கப்பட்டுள்ள injector ஆனது, அறுவைசிகிச்சை செயன்முறையை உள்ளுணர்வுடனும், மிருதுவாகவும், கட்டுப்பாட்டுடனும், சிக்கல்களின்றி அபாயத்தைக் குறைக்கின்றது. IOL இன் வடிவமைப்பானது, சிரமமின்றிய வகையில் மையப்படுத்தலை மேற்கொள்ள உதவுவதற்கும், capsular bag உடன் நேரடி தொடர்பை மேம்படுத்தவும் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டமிடப்பட்ட வடிவமைப்பானது, உறுதியான அமைப்பை உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், கண்களின் இயற்கையான அமைவிடத்தில் ஒரு நிலையான இடத்தை நோக்குவதற்கு உதவுகிறது. இதன் மூலம் நோயாளிகளுக்கு நம்பகமான மற்றும் நீடித்த தீர்வை அது வழங்குகிறது.



# ரிட்ஸ்பரி சம்பியன்ஷிப் போட்டிகள் வடக்கு -கிழக்கிற்கு விஸ்தரிப்பு

வடக்கு கிழக்குக்கான ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட் கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன் ஷிப் போட்டிகள் 2023 ஒக்டோபர் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் வெற்றிகரமாக நிறைவடைந்தன.

இலங்கையின் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், வலுவூட்டல், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை பரப்புவதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

பெண்கள் பிரிவில் ஒட்டுமொத்த சம்பியன்ஷிப் பட்டத்தை 81 புள்ளிகளுடன் தெஹியத்தகண்டிய தேசிய பாடசாலை அணி பெற்றுக் கொண்டது.

வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயம் 47 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர் கல்லூரி 45 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. ஆண்கள் பிரிவில், 77.5 புள்ளிகளுடன் பளை மத்திய கல்லூரி சம்பியன் பட்டத்தையும், புனித. சேவியர் ஆண்கள் கல்லூரி 75 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரி 52 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தியிருந்த ஆண்டின் சிறந்த பெண் மெய்வல்லுநருக்கான விருது சிவப்பிரகாச மகளிர் கல்லூரியின் வி.தெனிஷாவுக்கு வழங்கப்பட்டது.

இவர் நீளம் பாய்தலில் 4.83m எனும் இலக்கை எய்தியிருந்தார். அதுபோன்று, ஆண்கள் பிரிவில் ஆண்டின் சிறந்த மெய்வல்லுநருக்கான விருது வங்காலை புனித அன்னம்மாள் கல்லூரியின் ஏ.ரொமெக்சன் லம்பேர்ட்டுக்கு வழங்கப்பட்டது.

இவர் நீளம் பாய்தலில் 5.66m எனும் உயர் புள்ளிகளை பதிவு செய்திருந்தார். வடக்கு கிழக்கைச் சேர்ந்த 1000 க்கும் அதிகமான மெய்வல்லுநர்கள் இந்த ஆண்டின் போட்டிகளில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் (CBL) நிறுவனத்தின் இலங்கையின் அபிமானம் வென்ற சொக்லட் வர்த்தக நாமமான ரிட்ஸ்பரி, இளம் மெய்வல்லுநர்களை ஊக்குவித்து கட்டியெழுப்புவதில் தன்னை அர்ப்பணித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் சம்பியன்ஷிப் போட்டிகளை ஏற்பாடு செய்யும் நடவடிக்கையை ரிட்ஸ்பரி மேற்கொண்டதுடன், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மத்தியில் போட்டிகளுக்கான ஈடுபாடு, ஆர்வம் மற்றும் வாய்ப்பை வழங்கியிருந்தது.

# மட்டக்களப்பில் 3 குளங்கள் புனரமைப்பு



Coca-Cola அறக்கட்டளை மட்டக்களப்பில் திக்கனை குளம், மாணிக்கம் குளம் மற்றும் தாமரைக்குளம் ஆகிய 3 குளங்களை புனரமைத்துள்ளது. இதன் திறப்பு விழாவானது 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12ஆம் தேதி அன்று நடைபெற்றது.

உள்ளூர் அரசாங்க மற்றும் சமூக உறுப்பினர்களின் மதிப்பிற்குரிய பிரமுகர்கள் போன்றோர் இந்நிகழ்வினில்க் கலந்து கொண்டனர்.

"எமது செயல்களே எமது வரும்காலம்" என்ற மறுமலர்ச்சித் திட்டமானது, 2021இல் ஆரம்பித்து வைக்கப்பட்டதிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்தும் இடம் பெற்றது.

மேலும் இத்திட்டத்தின் கீழ், நீர் மீள்நிரப்புதல், பெண்கள் தொடர்பான அதிகாரமேம்பாடு மற்றும் கழிவுகள் தொடர்பான நிர்வாகம் போன்ற இலக்குகள் உள்ளடங்குகின்றன.

அதாவது, மட்டக்களப்பு பிரதேசத்தில் வசிக்கக்கூடிய 1,700 இற்கும் அதிகமான பின்தங்கிய நிலைக் குடும்பங்களுக்கு விவசாய நீர் விநியோகத்தினை உறுதி செய்வதே இத்திட்டத்தி பிரதான நோக்கமாகும்.



# பிலியந்தலையில் ஒரியண்ட் பைனான்ஸ்

ஒரியன்ட் பைனான்ஸ் பிஎல்சி, அதன் விரிவான தயாரிப்புகள், சேவைகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றின் மூலம் தனிநபர்களை வலுவூட்டுவதற்கும் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படும் புகழ்பெற்ற நிதி நிறுவனமாகும்.

இந்த மூலோபாய விரிவாக்கம், ஒரியண்ட் பைனான்ஸ/க்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். ஏனெனில் அது நாடு தழுவிய அளவில் தற்போது மொத்தமாக 33 கிளைகளுடன் தனது சேவைகளை விஸ்தரித்துள்ளது.

உயர்மட்ட நிதிச் சேவைகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்புக்கு இணங்க, தனது வலையமைப்பை விரிவுபடுத்தும் அதே வேளையில், ஒரியன்ட் பைனான்ஸ் கடந்த நிதியாண்டு முழுவதும் தனது கிளைகளை புதுப்பித்தல் மற்றும் இடமாற்றம் செய்வதில் ஈடுபட்டுள்ளது.

இந்த முயற்சிகள் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் பல்வேறு நிதித் தேவைகளை சிறப்பான முறையில் நிவர்த்தி செய்வதையும் வலுவான வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



# Sunshine இன் 'Project Delta'

Sunshine Consumer Lanka (SCL), சன்ஷைன் ஹோல்டிங்ஸின் நுகர்வோர் பிரிவான இலங்கையின் பல்வகைப்பட்ட நிறுவனங்களின் குழுவானது, சவாலான பெரிய பொருளாதார நிலைமைகளை எதிர்கொண்டு வெற்றிகரமாக முன்னேறுவதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கையாக 'Project Delta' என்ற புதிய புரட்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்தின் நோக்கம், நிறுவனத்தின் விநியோக வலையமைப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையை மிகவும் திறமையாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதும், மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து, கோவிட் தொற்றுநோய்க்குப் பிந்தைய காலத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் நிறுவனமாக Sunshine Consumer ஐ உருவாக்குவதும் ஆகும்.

இந்நிறுவனம் தனது அனைத்து வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளையும் கையாளும் விதத்தை மாற்றுவதற்கான ஒரு விரிவான முயற்சியாக 'Project Delta' ஏப்ரல் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டது.

Sunshine Consumer தனது விற்பனை நடவடிக்கைகளில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக சிரேஷ்ட சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை நிபுணர் நந்தன விக்கிரமகேயின் வழிகாட்டுதலின் கீழ் Project Deltaஇன் முதல் கட்டத்தை ஆரம்பித்தது.

அங்கு, தற்போதுள்ள விற்பனை அமைப்பு, விற்பனை அமைப்புகள் மற்றும் விற்பனை பணியாளர்கள் பற்றிய விரிவான மதிப்பீடு செய்யப்பட்டது.

# Pearl Bayஇல் சிறுவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு செலான் டிக்கிரியின் பரிசு

செலான் வங்கியின், சிறுவர் சேமிப்பு வர்த்தக நாமமான செலான் டிக்கிரி, அதன் டிக்கிரி சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஒரு உற்சாகமான ஊக்குவிப்பினை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

இளம் சேமிப்பாளர்களுக்கு வெகுமதி அளிக்கவும், அவர்களுக்கு மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்கவும், செலான் டிக்கிரி பண்டாரகமவில் அமைந்துள்ள Pearl Bay Theme Parkற்கு இலவச டிக்கெட்டுகளை வழங்குகிறது.

Pearl Bay Theme Park, நாட்டின் முதல் சர்வதேச தரத்திலான பொழுதுபோக்கு பூங்காவாகும். இது அனைத்து வயதினருக்கும் மறக்கமுடியாத அனுபவத்தை வழங்கும் வகையில் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.

SplashBay ஐரோப்பிய தரத்திலான நீர்ப்பூங்கா, SpeedBay FIA-CIKஆல் சான்றளிக்கப்பட்ட 1.2Km karting track, TargetBay தங்கள் துல்லியத்தை பரீட்சிக்கக்கூடிய 5-lane Air Rifle பயிற்சித் தளம், மற்றும் YumBay சிற்றுண்டி விடுதி மற்றும் உணவகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இந்த பிரத்தியேக ஊக்குவிப்பின் ஒரு பகுதியாக, புதிய செலான் டிக்கிரி கணக்கில் ரூ. 100,000/- அல்லது அதற்கு மேல் வைப்புச் செய்யும் வாடிக்கையாளர்கள் ரூ. 23,700/- மதிப்புள்ள பரிசு வவுச்சர்களை வெல்வதுடன் Pearl Bay Theme Parkஇன் சாகசங்கள் மற்றும் சிலிர்ப்பூட்டும் அனுபவங்களுக்கான ரூ. 19,600/- பெறுமதியான நான்கு இலவச டிக்கட்டுகளையும் பெற தகுதி பெறுவர். இச்சலுகையின் மொத்தப் பெறுமதி ரூ. 43,300/- ஆகும்.

இந்தச் சலுகை ஒக்டோபர் 31, 2023 வரை செல்லுபடியாகும் அதே வேளை, இது Pearl Bayக்கான தங்கள் வருகையைத் திட்டமிட குடும்பங்களுக்கு போதியளவு நேரத்தையும் வழங்குகிறது.




# Brandix இற்கு CIOB Green விருது

இலங்கையின் நிர்மாணத் துறையில் நிலைபேறாண்மை தொடர்பான சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியிருந்தமையை கௌரவிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற CIOB Green விருதுகள் 2023 இல் Brandixக்கு "நிலைபேறாண்மைக்கான தலைமைத்துவம் விருது" என்பதன் கீழ் பிளாட்டினம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் 519,042 எனும் மாபெரும் பசுமையான கட்டட சதுர அடிப்பரப்பை டீசயனெழை கொண்டுள்ளது. சூழலுக்கு நட்பான நிர்மாணத்துக்கு சிறந்த தொழிற்துறை நியமத்தை இந்த சாதனை பதிவு செய்திருந்தது.

நிறுவனம் தன்வசம் ஐந்து சான்றளிக்கப்பட்ட கட்டடங்களை கொண்டுள்ளதுடன், அவற்றில் (5) பசுமையான கட்டடங்களையும், அவற்றில் இரண்டு (2) LEED பிளாட்டினம், இரண்டு (2) LEED Gold மற்றும் ஒரு (1) GreenMark பிளாட்டினம் போன்றன அடங்கியுள்ளன.

பூஜ்ஜிய காபன் நிலையை எய்திய உலகின் முதலாவது ஆடை உற்பத்தியாளராகவும் நிறுவனம் திகழ்கின்றது. அவற்றில் ஆறு தொழிற்சாலைகள் பூஜ்ஜிய காபன் வசதிகளைக் கொண்டுள்ளன.

இலங்கையில் கட்டட மற்றும் நிர்மாணத்துறை நிபுணர்களுக்கான முன்னணி நிபுணத்துவ அமைப்பாக The Ceylon Institute of Builders (CIOB) திகழ்கின்றது. நிலைபேறான வழிமுறையை பின்பற்றுகின்றமைக்கான ஆற்றலை வெளிப்படுத்துகின்றமைக்காகவும், சூழல் பாதுகாப்பு, சமூக பொறுப்புணர்வு மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வெளிப்படுத்துகின்றமைக்காகவும் வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

# e Shift Concept Center அறிமுகம்




பசுமையான பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் பிரகாரம், Citizens Development Business Finance PLC (CDB), e Shift Concept Center ஐ அறிமுகம் செய்துள்ளது.

ஊனுடீ இன் நிலைபேறாண்மை நிகழ்ச்சிநிரலின் பிரகாரம், நிறுவனத்தின் நிலைபேறான போக்குவரத்து தீர்வுகளில் கவனம் செலுத்தும் வகையில் இந்த நிலையம் அமைந்துள்ளது.

CodeGen International (Pvt) Ltd உடன் CDB ஏற்படுத்திக் கொண்ட கைகோர்ப்பு உடன்படிக்கையின் பிரகாரம் இந்தத் தீர்வை வழங்க முன்வந்துள்ளது.

இந்த உடன்படிக்கையில் CDB இன் முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி மஹேஷ் நானயக்கார மற்றும் ஊழனநபுநெ இன் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி. ஹர்ஷ சுபசிங்க ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், சர்வதேச மற்றும் உள்நாட்டு பங்காளர்களுடன் CDB இணைந்து, இலங்கையில் நுஏஎ மற்றும் சூரிய வலுத் தீர்வுகளை ஊக்குவிப்பதற்காக ஹரித கைகோர்ப்பை ஆரம்பித்துள்ளது.

இந்த கைகோர்ப்பினூடாக ஏற்படுத்தப்பட்ட முக்கிய படிமுறையாக e Shift Concept Center நிலையம் அமைந்திருப்பதுடன், CodeGen International இன் துணைப் பிரிவான chargeNET உடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது.



# பிலியந்தலையில் மக்கள் வங்கி அலுவலகம்

மக்கள் வங்கியின் 25 ஆவது பிராந்திய தலைமை அலுவலகம், மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான கிளைவ் பொன்சேகா அவர்களால் அண்மையில் பிலியந்தலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட மட்டத்திலான கவனிப்பை வழங்குவதற்காகவும், செயல்பாடுகளை ஒருமுகப்படுத்துவதற்காகவும் கொழும்பு வெளிப்புறம் – II பிராந்தியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்டுள்ள பிராந்தியம் 14 கிளைகள் மற்றும் 20 சேவை மையங்களை உள்ளடக்கியுள்ளது.

மக்கள் வங்கியின் நிர்வாகப் பணிகளை எளிதாக்கும் வகையில் 1973 ஆம் ஆண்டில் பிராந்திய தலைமை அலுவலகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், தற்சமயம் நாடு முழுவதும் 25 பிராந்திய தலைமை அலுவலகங்கள் உள்ளன.

நளின் பெரேரா, உதவிப் பொது முகாமையாளர் (வழங்கல் முகாமைத்துவம்), எஸ்.எல்.எம்.ஏ.எஸ். சமரதுங்க, பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வெளிப்புறம் II), புத்திக ரணதுங்க, பிராந்திய முகாமையாளர் (கொழும்பு தெற்கு), நாளிகா லியனகே, பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வெளிப்புறம் I) ஆகியோர் அடங்கலாக, பல்வேறு சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.




# HNB FINANCE மற்றும் Auto Miraj இணைவு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC, வாகன சேவைத் துறையில் முன்னணி நிறுவனமான Auto Miraj உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதுடன், HNB FINANCE தனது லீசிங் வாடிக்கையாளர்களுக்கு பல தனித்துவமான நன்மைகளை வழங்குகிறது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று ஒக்டோபர் 4ஆம் திகதி இரு தரப்பினரும் நாவலையிலுள்ள HNB குஐயேுஊநு தலைமை அலுவலகத்தில் கைச்சாத்திட்டனர்.

HNB FINANCEஇன் முகாமைத்துவ பணிப்பாளர் சமிந்த பிரபாத், யுரவழ ஆசையத நிறுவனத்தின் பிரதித் தலைவர் ரமித் சரத்சந்திர, Auto Miraj நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளர் விராஜ் மெண்டிஸ், செயற்பாட்டுத் தலைவர் சுரேன் றொட்ரிகோ, சந்தைப்படுத்தல் முகாமையாளர் யொஹான் காளிதாச மற்றும் HNB FINANCEஇன் பிரதி நிறைவேற்று அதிகாரி மதுரங்க ஹீன்கெந்த, பிரதி பொது முகாமையாளர் பெத்தும் சம்பத் மற்றும் லீசிங் பிரிவின் பிரதான முகாமையாளர் அரோஷ் ஷானுக ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்த ஒப்பந்த காலத்தில் Auto Mirajக்கு வருகை தரும் HNB FINANCE வாடிக்கையாளர்களுக்கு HNB FINANCE பல பிரத்யேக தள்ளுபடிகள் மற்றும் வசதிகளை வழங்கும்.

இதன்படி, HNB FINANCE லீசிங் வாடிக்கையாளர்களின் முதல் வாகன சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது மற்றும் வாகனத்திற்கான இரண்டாவது சேவைக்கு கட்டணத்தில் 50% தள்ளுபடி வழங்கப்படும்.

மூன்றாவது சேவையின் போது உழைப்புக் கட்டணம் (Labour Charge) வசூலிக்கப்படாது. மேலும், இந்த தள்ளுபடிகள் கார் கீறல் பழுதுபார்த்து சரி செய்வதற்கு 25% தள்ளுபடியும், கார் பொலிஷ் மற்றும் உட்புற சுத்தம் செய்வதற்கு 25% தள்ளுபடி மற்றும் பிற சேவைகளுக்கு 50% தள்ளுபடி உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்படும்.

# DIMOவின் புதிய வகை உழவு இயந்திரம்



DIMO Agribusinesses மற்றும் அதன் நீண்டகால பங்காளியான Mahindra Tractors உடன் இணைந்து, இலங்கை விவசாய சமூகத்திற்கு சமீபத்திய தொழில்நுட்பத்துடன் கூடிய 50 குதிரை வலு (HP) கொண்ட Mahindra Yuvo Tech+ 585 உழவு இயந்திரத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் அறிமுக நிகழ்வு அநுராதபுரம், கலன்பிந்துனுவெவவில் உள்ள அழகிய வயல்வெளியில், பெருமளவிலான விவசாயிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

அத்துடன் இந்நிகழ்வில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு இந்த அதிநவீன உழவு இயந்திரத்தை சோதித்து பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது.

மஹிந்திராவின் அடுத்த தலைமுறை Yuvo உழவு இயந்தித் தொடரின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள இந்த உழவு இயந்திரம் பல்வேறு தனித்துவமான அம்சங்களுடன் வருவதோடு, இதன் காரணமாக அதன் செயற்றிறன் மற்றும் பல்வகை செயற்பாட்டு அம்ச திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இது கொண்டுள்ள அதிக முறுக்குவிசை (Torque) 197nm மற்றும் 2979 CC திறன் கொண்ட எஞ்சின் மூலம், வழுக்கும் நெல் வயலிலும் மற்றும் போக்குவரத்தின் போதும் அதிக சுமைகளை இழுக்கும் திறனை கொண்ட இந்த உழவு இயந்திரம், சுமார் 1700kg எடையை உயர்த்தும் திறன் கொண்டுள்ளது.

# இளைஞர்களுக்காக யூனிலீவரின் அற்புத திட்டம்

2025 ஆம் ஆண்டுக்குள் 100,000 இலங்கை இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான பயணத்தில் யூனிலீவர் ஸ்ரீலங்கா ஈடுபட்டுள்ளது.

அந்த வகையில், செப்டெம்பர் 2023 முதல் "60 நாட்களில் இலங்கையை சுற்றி யூனிலீவர்" பிரசாரத்தை அது முன்னெடுத்துள்ளது.

இது, எதிர்வரும் 60 நாட்களில் பயிலுனர் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புத் திறன்களை வழங்குவதை மையமாகக் கொண்டு, எதிர்கால தொழில் உலகில் முன்னேற அவர்களைத் தயார்படுத்தும். யூனிலீவரின் இலங்கையைச் சுற்றிய பயணத்தின் முதலாவது நிறுத்தமானது, Asia Pacific Institute of Information Technology (APIIT) இல் இடம்பெற்றது.

இங்கு, யூனிலீவர் ஸ்ரீலங்காவின் வீட்டு பராமரிப்பு தயாரிப்புப் பிரிவு தலைவரும் அதன் முகாமைத்துவ குழு உறுப்பினருமான கயான் ரூபசிங்க தலைமையில் #KathaBaha எனும் தலைப்பில், பயிலுனர் பட்டதாரிகளுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பு வழங்கப்பட்டது.

கயான் இங்கு தனது தொழில் வாழ்க்கை பயணம் தொடர்பான நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டார். ஆர்வமுள்ள மாணவர்களுக்கு விலைமதிப்பிட முடியாத தகவல்களையும் படிப்பினைகளையும் அவர் வழங்கினார்.

